(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 367.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 யூன் 05, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2581/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

மாவட்ட வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டுள்ள மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டினுள் வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடிய இயலுமை காணப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3113/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலும் பல தசாப்த காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்ட ரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3369/ '12

3.

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2 - 5 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு கோப்பை பசும்பால் வழங்க அரசு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதன் பிரகாரம் தற்போது ஒரு கோப்பை பசும்பாலைப் பெறுவதற்குத் தகுதியான பிள்ளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இதற்கென 2013 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதன்படி ஒரு பிள்ளைக்கு ஒரு கோப்பை பசும்பால் வழங்க செலவிடப்பட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள முன்பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் முன்பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தற்போது இலங்கைக்கு அவசியமாயுள்ள முன்பாடசாலைகளுக்கான தேசிய கொள்கையொன்றைத் தயாரித்து அதனைச் செயற்படுத்தும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3418/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர வகுப்புகளைச் சேர்ந்த பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக முச்சக்கர வண்டிகளையும், மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி வண்டிகளுடன் இணைந்த நேரடியான மற்றும் மறைமுகமான தொழில்வாய்ப்புக்கள் பல உருவாகி உள்ளன என்பதையும்;

(iii) முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்துள்ளமை மேற்படி தொழில்கள் பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமையலாமென்பதையும்;

(iv) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு தற்போது அறவிடப்படுகின்ற அதிக வரி அவற்றின் விலை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்ததன் பின்னர் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையினுள் அறவிடப்படுகின்ற வரித் தொகைகள் மற்றும் ஏனைய அறவீடுகளின் அளவுகளை சதவீத அடிப்படையில் வருட ரீதியில் வெவ்வேறாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3711/ '13

5.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 மார்ச் மாதமளவில் மக்கள் வங்கியின் தலைவராக இருந்தவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(ii) இவர் மேற்படி பதவிக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் வேறு ஏதேனும் பதவியை வகித்தாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அப்பதவி யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பதவிக்காகவும் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் ஏனைய அனைத்து கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(v) இவரது கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் யாவையென்பதையும்;

(vi) இவருக்கு வங்கித் துறை சம்பந்தமாகவுள்ள கல்வித் தகைமைகள், ஏனைய தகைமைகள் மற்றும் அனுபவம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மக்களுடைய சேமிப்புகள் பெருமளவிலுள்ள மக்கள் வங்கிக்கு முழுநேர தலைவரொருவர் தேவையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பல பணிகளில் ஈடுபட்டுள்ள நபரொருவரை அப்பதவிக்கு நியமிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4288/ '13

6.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது மக்கள் வங்கி கடும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதும், 50 வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 4063 கோடி கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படாமையே அதற்கான பிரதானமான காரணம் என்பதும் 2012 ஆம் ஆண்டின் கோப் (COPE) அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட கடன் தொகையை திருப்பிச் செலுத்தாத ஆட்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் அறவிடப்பட வேண்டியுள்ள வட்டித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கடன் தொகைக்கு மேலதிகமாக மக்கள் வங்கியிலிருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட கடன் தொகையை செலுத்தத் தவறியமையினால் மக்கள் வங்கி நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதை ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கடனை மீள அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4307/ '13

7.

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் 2012ஆம் ஆண்டு முதல் இற்றைவரையில் அறிக்கையிடப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையையும்;

(ii) 2011ஆம் ஆண்டு முதல் இற்றைவரையில் இதன் விளைவாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையையும்

ஆண்டு ரீதியாக அவர் கூறுவாரா?

(ஆ) 2009 சனவரி முதல் இற்றைவரையில் ஆண்டு ரீதியாக,

(i) கண்டுபிடிக்கப்பட்ட டெங்கு நுளம்பு பெருகும் பிரதேசங்களின் எண்ணிக்கையையும்;

(ii) டெங்கு நுளம்பு பெருகும் பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) 2010 சனவரி முதல் இற்றைவரையில் ஆண்டு ரீதியாக,

(i) அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் அறிக்கையிடப்பட்ட இலங்கையின் மூன்று மாவட்டங்களையும்;

(ii) இம்மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கண்டுபிடிக்கப்பட்ட டெங்கு நுளம்பு பெருகும் பிரதேசங்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) நாட்டில் டெங்குத் தொற்று தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்களையும்;

(ii) அக்குழுக்கள் ஒவ்வொன்றினதும் நியமனத் திகதிகளையும்;

(iii) அக்குழுக்கள் ஒவ்வொன்றினதும் ஆணைகளையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4326/ '13

8.

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹொரண, ஶ்ரீ மேதங்கர மகா வித்தியாலய அதிபருக்கு எதிராக 2013 ஒக்றோபர் மாதமளவில் நடைபெற்றுள்ள ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த ஒழுக்காற்று விசாரணைகளுக்கு ஏற்புடைய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்படுதல் மற்றும் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் தாமதமானதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4338/ '13

9.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய சேமிப்பு வங்கி தொகுதிக்கடன் (முறி) ஒன்றை விநியோகிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தக சந்தையிலிருந்து 2013 செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில் சுமார் 750 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட முறியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வருடாந்த வட்டி விகிதம் மற்றும் முறியின் நிலையான போக்கு ஆகியவற்றுடனும்;

(ii) மேற்குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது யாதாயினும் தெரிந்தெடுப்புரிமை உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட முறியின் மூலமாக தேசிய சேமிப்பு வங்கி இந்நிதியைத் திரட்டுவதற்கான நோக்கத்தையும்;

(ii) குறிப்பிட்ட முறியின் வெளிநாட்டு நாணய நட்ட ஆபத்துக்குப் பொறுப்பான நபரையும்

(iii) மேற்கூறப்பட்ட நடவடிக்கை தேசிய சேமிப்பு வங்கிக்கும் வேறு ஏதேனும் தரப்பிற்கும் இடையேயான ஒரு கூட்டு நடவடிக்கையா என்பதையும் அத்தகைய தொடர்பின் தன்மையையும்

அவர் கூறுவரா?

(ஈ) குறிப்பிட்ட முறிகளை வழங்குவதில் சம்பந்தப்பட்ட முகாமையாளர்கள் (இறுதி முதலீட்டாளர்களுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் இடையேயான இடையீட்டாளர்கள்) யாவர் என்பதையும் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்களையும் தனித்தனியாகவும் அவர் கூறுவரா?

(உ) இன்றேல், ஏன்?

4428/ '13

10.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009-09-24 ஆம் திகதிய 1620/22 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணங்களுக்கு அமைவாக இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் சேவையிலீடுபட்டுள்ள நூலகர்களுக்கு முற்திகதியிட்டு குறித்த வகுப்பிற்கு வழங்கப்பட வேண்டிய பதவியுயர்கள் இதுவரையில் உரிய முறையில் வழங்கப்படவில்லையென்பதையும்;

(ii) தற்போது அரசாங்க நூலகர் சேவையின் ஆட்சேர்ப்பு வகுப்பான III ஆம் வகுப்பில் பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட சேவைப் பிரமாணங்களில் இனங்காணப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கையில் 70% கும் அதிகமானவை இற்றைவரை வெற்றிடங்களாக காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1981 ஆம் ஆண்டு தொடக்கம் மேலே குறிப்பிடப்பட்ட நூலகர் சேவையின் உயர்/விஷேட வகுப்பின் சம்பள அளவுத் திட்டமானது நாடளாவிய சேவைகளின் II/II வகுப்பின் சம்பள அளவுத் திட்டத்திலும் உயர்வாக காணப்பட்டதென்பதையும்;

(ii) 06/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் மூலம் நூலகர் சேவையின் விஷேட வகுப்பானது மேலே குறிப்பிடப்பட்ட நாடளாவிய சேவை தாபிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மிகவும் கீழான MN – 07 சம்பள அளவுத் திட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இதன் மூலம் நூலகர் விஷேட வகுப்பிற்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இந் நடவடிக்கைகள் எத்திகதியிலிருந்து அமுலாக்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4442/ '13

11.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரிக்கு பெற்றுக் கொடுத்த வசதிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக செலவிட்ட நிதி ஏற்பாடுகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கல் பணிகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4561/ '13

12.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வாய்மூல விடைக்கானதல்லாத வினாவாக, 2013.07.26ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட 3194/12 ஆம் இலக்க வினாவின் (அ) பகுதிக்கு ஏற்புடையதாக வழங்கப்பட்ட விடை தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடைக்கமைய, கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லமொன்றில் வசிக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளரை அகற்றுவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4567/ '13

13.

கௌரவ துனேஷ் கங்கந்த,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 18 வயது தொடக்கம் 22 வயது வரையான ஒவ்வொருவருக்கும் தமது விருப்பின் பிரகாரம் தேவைப்படுகின்ற மூன்றாம்நிலைக் கல்வியை அல்லது பயிற்சியை பெற்றுக்கொள்வதற்காக ரூபா இரண்டு இலட்சம் வரையான பணத் தொகையொன்றை ஒதுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இற்றைவரை இந்த வசதியைப் பெற்றுக்கொண்டுள்ள இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி வசதியைப் பெறுவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை யாதென்பதையும்;

(iv) வழங்கப்படும் பணத் தொகை மீள அறவிடப்படுமா என்பதையும்;

(v) அப் பணத்தொகை மீள அறவிடப்படுமெனின், மேற்படி பணத் தொகையைப் பயன்படுத்தி பெறப்படுகின்ற கல்வி அல்லது பயிற்சி முடிவடைந்து எவ்வளவு காலத்தின் பின்னர் அது அறவிடப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இற்றைவரை மேற்படி வசதியை வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லையெனின், மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கின் மூலம் மேற்படி இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி வாக்குறுதியை யதார்த்தமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4666/ '13

14.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்கின்றபோது மருந்துகளை தெரிவு செய்கின்ற நடைமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது யாது என்பதையும்;

(iii) மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக தற்போது சுகாதார அமைச்சின் கீழ் பதிவு செய்துள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்கள் ஊடாக இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகள் இலங்கையில் தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்து வகைகள் காலாவதியாகும் திகதியைத் தீர்மானிக்கும் பொருட்டு பின்பற்றப்படுகின்ற நடைமுறை யாது என்பதையும்;

(ii) மருந்து வகைகளை இறக்குமதி செய்தல் அவற்றின் உற்பத்தித் திகதியிலிருந்து எவ்வளவு காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும்;

(iii) கடந்த காலங்கள் முழுவதும் அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து காலாவதியான மருந்துகள் கண்டெடுக்கப்பட்டமை அறிக்கையிடப்பட்டதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) கடந்த ஆண்டில், காலாவதியானதன் காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளின் அளவு மற்றும் அவற்றின் பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4746/ '14

15.

கௌரவ அஷோக் அபேசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் அடைவதற்கு ஏதுவாயமைந்துள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) 2011 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வருடாந்தம் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) மசகு எண்ணெய் இறக்குமதி குறைவடைந்தமையால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகின்றமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

2.

மொஹான் லால் கிரேரு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

3.

விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

4.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

5.

பண்டு பண்டாரநாயக்க ஹெல ஜன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

6.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி பீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

7.

ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

8.

பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

9.

மிஸ்டிகல் ரோஸ் சர்வதேச நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

ஸ்ரீ லங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

இலங்கை எழுத்தாளர்கள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

தாம்பே, மீகொட போதிவர்தனாராம ஸ்ரீ மதுரசாம பிரிவென் விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

இலங்கை ஒளிப்படவியலாளர் சங்கங்களின் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 15.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

22.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

23.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

24.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.